


The Forsaken Land (கைவிடப்பட்ட பூமி) திரைப்படத்தைச் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் பாரிஸின் திரையரங்கொன்றில் பார்த்தேன். இத்திரைப்படம் என்னைக் கவர்ந்தது. என்னுடைய சில நண்பர்களுக்கும் இதை நிச்சயம் பார்க்கும்படி பரிந்துரை செய்தேன். நான் பரிந்துரைத்தேன் என்பதைவிட இப்படத்திற்கு 2005ம் ஆண்டு கான் திரைப்பட விழாவில், புதிய இயக்குநர்களின் முதலாவது திரைப்படத்திற்கான Camera d'Or விருது கிடைத்திருந்தது. நண்பர்களுடன் மீண்டும் நானும் இத்திரைப்படத்தைப் பார்க்கச் சென்றோம். படம் முடிந்தவுடன் திரையரங்கிற்கு வெளியே வந்தபோது ஒரு நண்பர் மிகுந்த ஆத்திரத்துடன் இது ஒரு போர்னோகிராபி எனக் கூறிவிட்டுப் போனார். இன்னொரு நண்பரைச் சந்தித்துப் பேசியபொழுது மிக அமைதியாக இது ஒரு பாதிப் போர்னோகிராபி என்றார். மற்றவர்கள் மௌனம் காத்தார்கள். இத்திரைப்படம் தொடர்பாக இந்த மனோநிலையே பரவலாகக் காணப்பட்டதை உணர்ந்தேன். அத்துடன் இலங்கையில் 3 நாட்கள் மட்டுமே திரையிடப்பட்டு நிறுத்தப்பட்ட செய்தியையும் அறிந்தேன். 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையின் கடைசி இதழின் வாசகர் கடிதம் வரை இந்நிலை தொடர்கிறது. இவைகளிற்குப் பின்னர்தான் நான் இதை எழுதுவதற்குத் தள்ளப்பட்டேன்.

இந்தத் திரைப்படம் தொடர்பாக எழுந்த குற்றச் சாட்டுகளை முதலில் பாரத்தோமானால்,

1. இது ஒரு போர்னோகிராபி வகையான திரைப்படம்
2. கதைக்கரு அற்ற திரைப்படம்
3. மேலைத்தேயப் பார்வையாளர்களுக்கு எமது ரணங்களை வியாபாரப் பொருளாக்குதலை நோக்கமாகக் கொண்ட திரைப்படம்

உண்மையில் இந்தத் திரைப்படம் போர்னோகிராபி வகையைச் சார்ந்தது எனக் கூறுவது சரிதானா?

நேரடியான உடலுறவுக் காட்சிகள் படத்தில் இருக்கும் என்றால் அவை எல்லாம் போர்னோகிராபி என்று கூறமுடியுமா? அப்படியானால் உலக சினிமாவின் மிகச் சிறந்த இயக்குநர்கள் என்று கருதப்படுபவர் களில் பலர் போர்னோகிராபி இயக்குநர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய அபாயம் ஒன்று இங்கே உள்ளது.

இத் திரைப்படத்தில் ஒரு காட்சியில் இராணுவச் சிப்பாய் ஒருவன் அவசரமாக சைக்கிளில் வந்து, அதை வீசி எறிந்துவிட்டு லதாவுடன் உடலுறவு கொள்வான்.

இந்தக் காட்சி ஒரு முட்கள் நிறைந்த புதருக்குள் தூரக் காட்சியாக, திரைப்படுத்தப்பட்ட கோணத்திலும் மிகுந்த கவனத்துடன் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும். ஆனால், இந்தக் காட்சிதான் இவர்களைப் போர்னோகிராபி என்றும் It's very dark and haunting என்றும் கூற வைப்பது.

சேகர் கபூரின் 'பண்டிற் குவீன்' திரைப்படத்தில் பிரதான பாத்திரம் வெட்டவெளி வறண்ட நிலத்தில் வைத்து வன்புணர்ச்சி செய்யும் காட்சி படமாக்கப் பட்டிருக்கும். நான் இந்தக் காட்சியை எனது பதினாறு வயதில் பார்த்திருக்கிறேன். அது ஏற்படுத்திய தாக்கம் என் மனதில் இன்னும் உறைந்து கிடக்கின்றது. ஆனால் இந்தக் கதாபாத்திரத்தின் உணர்வுநிலையைப் புரிந்து கொள்ளாமல் "அய்யோ! அய்யோ! கலி முற்றி விட்டது. வன்புணர்ச்சியை திரைப்படத்தில் காட்டுகிறார்கள்" என்று சொல்லி அதன் அரசியலுக்குள் புகமுடியாதவர்களால்தான் இந்தக் காட்சியை It's very dark and haunting என்று கூறமுடியும்.

நம் மத்தியில் உள்ளவர்கள் வேற்று மொழிப் படங்களில் இப்படியான காட்சிகள் வந்தால் அதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. தாம் சார்ந்த கலாச் சாரப் பின்னணி கொண்ட பெண்களின் நிர்வாணத்தை திரையில் காண்பதைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. இவர்கள் எதை நம்ப விரும்பு கின்றார்கள் என்றால், அவர்கள் வாழும் சமூகத்தில் தம்மைச் சூழ வுள்ள பெண்கள் எல்லாரும் அந்தச் சமூகம் யாருடன் உறவு கொள்வதைச் சம்மதிக்குமோ அவர்களுடன் மட்டும் வெட்கத்துடன் விளக்கை அணைத்து விட்டு போர்வைக்குள் உறவு கொள்ள வேண்டும் என்பதை. யதார்த்தமாக எடுக்கப்பட்ட இவ்வாறான காட்சிகள் இவர்களின் நம்பிக்கையை உடைத்தெறிகிறது.

இத்திரைப்படம் சம்பவங்களூடாக நகரும் மரபான கதைத் தளத்தைக் கொண்டதல்லதான். இப்படத்தில் கையாளப்பட்டிருக்கும் திரைக்கதை உத்தி ஒன்றும் புதிய முயற்சியும் அல்ல. இதுபோன்ற பல திரைப்படங் களை சர்வதேச சினிமா கண்டுதான் வந்திருக்கிறது. காட்சிகள் மிகப் பூடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நவீன சினிமாவுக்கான அம்சங்களுடன் கூடியது.

இந்த சினிமா மொழியைப் புரிந்து கொள்ள விரும்பாதவர்களும், இன்னும் "நவீன ஓவியம் என்ன ஓவியம்? நானும்தான் வரைவேனே! துணி யையும் தூரிகையையும் வண்ணக் கலவைகளையும் தாருங்கள்" என விதண்டாவாதம் பேசுபவர்களுக்கும் நிச்சயம் இந்தச் சினிமா மொழி புதிரானதுதான். சாப்ளினின் திரைப் படங்களைப் பார்த்து வெறுமனே சிரித்துவிட்டு மட்டும் போகும் பார்வையாளரின் மனோநிலை போன்றதே.

திரையில் காட்டப்படும் நிலம் எங்கு உள்ளது? இதில் தோன்றும் மனிதர்கள் எல்லாம் எந்தப் பூமிப் பரப்பின் மாதிரிகள்? என்பதே திரைப்படம் வைத்தி ருக்கும் வினாக்கள். இதற்குப் பதில் தேட எம்மைத் தூண்டுவதே இத்திரைப்படத்தின் நோக்கமாக இருக்க முடியும். வறண்ட பூமி, உள்நாட்டு யுத்தம், இராணுவ வீரனின் காம இச்சை, இராணுவத்தின் அடாவடித்தனம், இனம் தெரியாத உயிரற்ற உடல், விரக தாபத்தால் அவதியுறும் வயதான ஆண், பாலியல் உறவற்ற நடுத்தர வயதுப் பெண், கணவனால் பாலியல் திருப்திக்கு உள்ளாகாத பெண், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக வாய்ப்புள்ள சிறுமி, அவளின் எதிர்காலம் என ஒரு நிலத்தின் அரசியல், கலாச்சாரம், பாலியல், பொருளாதார கருதுபொருள்களின் நிலையைப் பிரதிபலிக்கும் நோக்கிலேயே காட்சிகள் நிர்ண யிக்கப்பட்டு அடுக்கப்பட்டிருக்கிறது.

நம் மத்தியில் ஒரு படைப்பு சர்வதேச அங்கீகாரம் பெற்றுவிட்டாலோ அல்லது மேற்குலக மக்களால் பாராட்டப்பட்டாலோ நாம் உடனே இது மேற்குலகத் திற்கான படைப்பு. எமது ரணங்களைப் பெரிதுபடுத்திக் காட்டி நாம் சார்ந்த சமூகத்தை





அவமானப்படுத்துகிறோம் என்று விமர்சனம் கூறிவிடுவோம். உண்மையில் நாம் எமது ரணங்களை மூடிமறைத்து சீழ்வடிய வைத்தாலும் வைப்போமேயன்றி அதற்கு மாற்றுகளை எப்போதுமே தேடுவதில்லை.

பல ஆயிரம் ஆண்டுகளாகக் கட்டிக் காத்து வந்த கலாச்சாரம் என்னாவது?

அது வெளியில் தெரிந்தால் எம் கௌரவம் என்னாவது?

நாம் தீக்குளித்தும் நகரத்தை எரித்தும் எமது புனிதத் தன்மையைக் காத்துக் கொள்வோம்.

சினிமா பல தளங்களைக் கடந்து பல சோதனை முயற்சிகளைக் கடந்து பல வெற்றிகளைக் கண்டு நம்முன் பலவிம்பங்களை விட்டுச் சென்றிருக்கின்றது.

ஆனால் நாம் இன்னும் குடும்பத்தோடு அமர்ந்து பார்க்கத் திரைப்படங்களைத் தேடுகின்றோம். தமிழ்த் திரைப்படங்களில் தொப்புளை tight closeupஇல் ஆட்டிக் காட்டும்போது பூரித்துப் போகிறோம். பாடல் காட்சிகளில் உடலுறவுக்கான முத்திரைகள் போல் இடுப்பை இடுப்பை ஆட்டும்போதும், போர்வைக்குள் படுத்துக்கொண்டு ஆளுக்குமேல் ஆள் புரளும்போதும் நாம் குடும்பத்தோடு இருந்து பார்ப்போம். சிறுபிள்ளைகளை அதைப் போன்று ஆடவைத்து ரசிப்போம். ஆனால் 16 வயதிற்கு மேல் பார்க்க வேண்டும் என்று கூறி ஒரு படத்தை ஆக்கபூர்வமாக எடுத்தால் நாம் குழம்பியடிக்கிறோம். நாம் இன்னும் அந்தளவிற்கு வளர்ச்சியடையவில்லை.

இதுபோன்ற படமெடுப் பவர்கள் இனி 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு என்று கூறாமல் இப்படியான திரைப்படங்களைப் பார்ப்பதற் குரிய வளர்ச்சி அடைந்தவர்கள் மாத்திரம் எனக்கூற வேண்டும் எனப் பரிந்துரைக்கிறேன்.

ஏனென்றால், அரசியல் பொருளாதார கருது பொருள்கள் குறித்த விசாலமான பார்வையைக் கொண்டிருப்பவர்கள்கூட, கலாச்சாரம், பாலியல் போன்ற கருதுபொருள்களுக்கு வந்து சேருகின்றபோது மிகமோசமான பழமைவாத, பிற்போக்கு அமசங்களையே வரித்துக்கொண்டிருப்பது வருத்தத்திற் குரியது.

விமுக்தி ஜயசுந்தர என்றொரு துரதிர்ஷ்டசாலி சில வருடங்களை புனே பிலிம் இன்ஸ்ரிரியூட்டில் கழித்து உதவி இயக்குநராகப் பணி புரிந்து தனது முதல் சினிமாவுக்கே உலகின் சினிமா மேதைகள் அலங்கரித்த மேடையில் விருதையும் பெற்று நின்றும், அவன் எந்த சமூகத்திற்காக தனது படைப்பைச் செய்தானோ அதே மக்களால் புறக்கணிக்கப்பட்டு, விமர்சகர்களால் அவமானப்படுத்தப்பட்டு, படத்தைப் பார்க்காதீர்கள் என்று ஊடகங்களில் பகிரங்க அறிவித்தல் செய்யப் பட்டு மிகக் கேவலமாக புண்படுத்தப்பட்டு இருக்கிறார்.

